குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

குற்றப்பல்வகை மனு எண். 381/2024

பு.சா. 1

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. சங்கர் ரெட்டி |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு. முனிரெட்டி |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 67 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. **01.08.2024**

<u>மெய்யுறுதியின் பெயரில் விசாரணை :</u>

1) நான் கர்நாடக மாநிலம் பெங்களூரில் வசித்து வருகிறேன். நான் தற்போது திரு.K.L.அனந்தபத்மநாபஷா என்பவரிடம் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். திரு.K.L.அனந்தபத்மநாபஷா என்பவருக்கு சொக்காபுரம் கிராமத்தில் பல புல எண்களில் சொத்துக்கள் உரிமைப்பட்டுள்ளது. மேற்படி சொத்துக்களை அவர் பதிவுசெய்யப்பட்ட கிரைய ஆவணங்களின் மூலம் கிரையம் பெற்றுள்ளார். மேற்படி நிலங்களை பராமரித்துக்கொள்வதற்கு வேண்டி திரு.ராமைய்யா என்பவரை பணியமர்த்தி இருந்தார். இந்நிலையில் கடந்த 2021ம் ஆண்டு திரு.ராமைய்யா அவர்கள் மேற்படி நிலங்களை பார்வையிட்டபோது அங்கே சில நபர்கள் நடமாடிக்கொண்டிருப்பதைப் பார்த்து அவர்களிடம் விசாரித்தபோது, அவர்கள் திரு.K.L.அனந்தபத்மநாபஷா இறந்துவிட்டதாகவும், அவரது வாரிசு பொது அதிகாரம் பதிவு செய்துள்ளதாகவும் விவரம் தெரிவித்தனர். இதனடிப்படையில் விசாரித்தபோது திரு.K.L.அனந்தபத்மநாபஷா கடந்த 2014ம் வருடம் காலம் சென்றுவிட்டதாக போலியான இறப்புச் சான்றிதழைப் பெற்று, அவருக்கு எதிரி திரு.ராமச்சந்திரஷா என்பவர்தான் ஒரே வாரிசு என்று கூறி போலியாக வாரிசு சான்றிதழ் பெற்றுள்ளார் என்றும், அதனைப் பயன்படுத்தி

திரு.K.L.அனந்தபத்மநாபஷாவுக்கு உரிமைப்பட்ட சொத்துக்களுக்குரிய உரிமை மூல ஆவணங்கள் காணாமல் போய்விட்டதாக உண்மைக்கு புறம்பான விவரத்தினைக் கூறி எச்.எஸ்.ஆர்.லேயவுட் காவல் நிலையத்தில் 'Non Traceable Certificate'-யை எதிரி ராமச்சந்திரஷா பெற்றுள்ளார்.

2) அதன்பின்னிட்டு எதிரி திரு.ராமச்சந்திரஷா மேற்படி போலியாக பெற்ற ஆவணங்களைப் பயன்படுத்தி திரு.கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு போலியான பதிவுசெய்யப்பட்ட பகர அதிகார பத்திரம் ஏற்படுத்தியுள்ளார். பகர அதிகாரம் பெற்றதன் அடிப்படையில் திரு.கிருஷ்ணமூர்த்தி அவரது மகன் பெயரிலும் மற்றும் ஒரு நபர் பெயரிலும் பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தம் திரு.K.L.அனந்தபத்மநாபஷாவிற்கு உரிமைப்பட்ட சொத்துக்கள் குறித்து சட்டவிரோதமாக ஏற்படுத்தியுள்ளார். மேற்படி குற்றச்செயல்கள் குறித்து மேற்படி எதிரிகள் மீது கிருஷ்ணகிரி நில அபகரிப்பு சிறப்புப் பிரிவில் புகார் அளித்தோம், அவர்கள் பெங்களூர் வந்து திரு.K.L.அனந்தபத்மநாபஷா தற்போது உயிருடன் உள்ளார் என்பதை உறுதி செய்தனர், அதன்பின்னிட்டு எதிரி.திரு.கிருஷ்ணமூர்த்தியையும் விசாரித்தனர். இருப்பினும் எதிரிகள் மீது தற்போதுவரை காவல் துறையினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

3) ஆகவே, இம்மனுவினை தாக்கல் செய்துள்ளேன். இம்மனுவினை அனுமதித்து, எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யுமாறு பேரிகை காவல் நிலையத்திற்கு உத்தரவிடுமாறு வேண்டிக்கொள்கிறேன். கீழ்க்கண்ட ஆவணங்கர் புகார்தாரர் தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்து மனுப்படி ஆணை பிறப்பிக்க வேண்டுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 23.02.1987 | பு.சா.ஆ.1 | பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவண எண்.141/1987, சார்பதிவாளர் அலுவலகம் சூளகிரி | ஒளி நகல் |
| 23.02.1987 | பு.சா.ஆ.2 | பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவண எண்.137/1987, சார்பதிவாளர் அலுவலகம் சூளகிரி | ஒளி நகல் |
| 23.02.1987 | பு.சா.ஆ.3 | பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவண எண்.133/1987, சார்பதிவாளர் அலுவலகம் சூளகிரி | ஒளி நகல் |
| 23.02.1987 | பு.சா.ஆ.4 | பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவண எண்.145/1987, சார்பதிவாளர் அலுவலகம் சூளகிரி | ஒளி நகல் |
| 30.12.1985 | பு.சா.ஆ.5 | பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவண எண்.198/1986, சார்பதிவாளர் அலுவலகம் சூளகிரி | ஒளி நகல் |

| | | | |
|---|---|---|---|
| 08.12.2023 | பு.சா.ஆ-6 | புகார் மனு | அலுவலக நகல் |
| | பு.சா.ஆ.7 | அஞ்சல் ஒப்புகை அட்டை ( ஒரு எண்ணிக்கை) | அசல் |
| 08.12.2023 | பு.சா.ஆ.8 | புகார் மனு | அலுவலக நகல் |
| | பு.சா.ஆ.9 | அஞ்சல் ஒப்புகை அட்டை (ஒரு எண்ணிக்கை) | அசல் |
| | பு.சா.ஆ.10 | திரு.K.L.அனந்தபத்மஷா அவர்களின் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது) | ஒளி நகல் |
| | பு.சா.ஆ.11 | திரு.சங்கர் ரெட்டியின் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது) | ஒளி நகல் |
| 05.11.2012 | பு.சா.ஆ.12 | திரு.K.L.அனந்தபத்மஷா அவர்கள் மனுதாரருக்கு வழங்கிய அதிகார கடிதம் | அசல் |

<u>மெய்யுறுதியின் பெயரில் விசாரணை முடிக்கப்படுகிறது.</u>

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு
தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன்
சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு
சரியென ஒப்புக்கொண்டார்

ஓம்/-வ.அகவிதன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
ஒசூர்.